New South Wales
State Emergency Operations Centre

NSW Health

**Message from NSW State Emergency Operations Controller**

நியூ சவுத் வேல்ஸ் அவசரகால செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து செய்தி

நூதன கொரோனா வைரஸ் (COVID-19)

நம்முடைய எல்லா சமூகத்தினருக்கும் மற்றும் குடும்பங்களுக்கும்

நியூ சவுத் வேல்ஸ் *பொதுச் சுகாதாரச் சட்டம் 2010* -இன் 7-வது பிரிவின் கீழ் *பொதுச் சுகாதார (COVID-19 தனிமைப்படுத்தல்) 2020 உத்தரவை* நியூ சவுத் வேல்ஸ் சுகாதார அமைச்சர் பிராட் ஹஸார்ட் எம்.பி. (Brad Hazzard MP) பிறப்பித்துள்ளார்.

அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அந்த ஆணையின்படி, நியூ சவுத் வேல்சுக்கு வருகை தரும் ஒரு நபர் வந்திறங்குவதற்கு முன்பு வேறொரு நாட்டில் இருந்திருந்தால், கட்டாயம் 14 நாட்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும். இதை நாங்கள் தனிமைப்படுத்தப்பட்ட காலம் என்று அழைக்கிறோம்.

ஆஸ்திரேலியாவில் வைரஸ் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் காமன்வெல்த் அரசாங்கத்துக்கு நியூ சவுத் வேல்ஸ் ஆதரவளிக்கிறது. இந்த வைரஸ் **கொரோனா வைரஸ்-19 (COVID-19)** என்று அழைக்கப்படுகிறது. இது **நவீன கொரோனா வைரஸ்** என்றும் அழைக்கப்படுகிறது. இந்த வைரஸ் இப்போது பல்வேறு நாடுகளில் பரவிக்கொண்டு வருவதால்தான் இது ஒரு கொள்ளை நோய் எனக் கூறப்படுகிறது.

திரும்பவரும் பயணிகள், சர்வதேச வருகையாளர்கள் மற்றும் COVID-19 வைரஸால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள், அத்துடன் COVID-19 நோயாளிகளுடன் 'நெருங்கிய தொடர்பு' கொண்டவர்கள் உட்பட, நியூ சவுத் வேல்சுக்குள் நுழையும் அனைவரும் சுயமாகத் தனிமைப்படுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென காமன்வெல்த் மற்றும் மாநில அரசு தெரிவிக்கின்றன.

*பொதுச் சுகாதாரச் சட்டம் 2010* -இன் கீழ் இந்த பொதுச் சுகாதார முன்னெடுப்பை ஆதரிக்க நியூ சவுத் வேல்ஸ் காவல்துறைக்கு அதிகாரங்கள் உள்ளன.

## நீங்கள் அறியவேண்டியது:

- சுகாதார அமைச்சரின் *பொதுச் சுகாதார (COVID-19 தனிமைப்படுத்தல்) 2020 ஆணைக்கு* ($11,000 மற்றும்/அல்லது 6 மாதச் சிறைத்தண்டனை) ஒருவர் உடன்படத் தவறினால் அது ஒரு குற்றமாகும். விரிந்த சமுதாயத்தில் உடல்நலத்துக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைக்கும் வகையில், நியூ சவுத் வேல்ஸ் காவல்துறையானது நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை மற்றும் பிற மாநில மற்றும் காமன்வெல்த் நிறுவனங்களுடன் நெருக்கமாகத் தொடர்ந்து பணியாற்றும்.
- COVID-19 பரவலின் வேகத்தைக் குறைக்க சுய தனிமைப்படுத்தல் மிக முக்கியமாகும். உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள மற்றவர்களைப் பாதுகாக்க இது ஒரு சக்திவாய்ந்த வழியாகும்.
- நல்ல சுகாதார நடவடிக்கைகளுடன் (தொடர்ந்து கைகழுவல் மற்றும் மடக்கிய முழங்கையில் இருமுதல் போன்றவை) கூடிய சுய தனிமைப்படுத்தலானது வேகமாகத் தொற்றக்கூடிய வைரஸ் பரவும் வேகத்தைக் குறைக்கிறது.

- சுய தனிமைப்படுத்தல் மற்றும் நல்ல சுகாதாரமானது மிகவும் நோய்வாய்ப்படக்கூடிய அபாயத்தில் உள்ள மற்றும் மரணத்தை நோக்கிச் செல்லக்கூடிய கடுமையான நோய்நிலைமை கொண்டுள்ள, மிக எளிதில் பாதிக்கப்படக்கூடிய சமுதாய அங்கத்தினர்களைப் பாதுகாக்க உதவுகிறது. சுய தனிமைப்படுத்தல் அத்தியாவசியமான, உயிர்காக்கும் சுகாதாரச் சேவைகளில் கொள்ளைநோயின் தாக்கத்தையும் குறைக்கிறது.

## நீங்கள் செய்யவேண்டியது:

- சுய தனிமைப்படுத்தலில் இருக்கும்போது, கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) அறிகுறிகள் உங்களுக்கு இருக்கின்றனவா என்று நீங்களே உங்களைக் கண்காணிக்க வேண்டும். அறிகுறிகள் தோன்றினால், "நேரடிச் சுகாதாரத்துக்கு" (HEALTHDIRECT) 1800 022 222 என்ற எண்ணில் தெரிவிக்கவும். அவசரநிலைமை என்றால் ஆம்புலன்ஸை அழைத்து, நீங்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் இருப்பதாகக் கூறவும்.

- மருத்துவப் பராமரிப்பை அல்லது பொருட்களைப் பெறுவது அல்லது அவசரநிலைக் காரணம் போன்றவை தவிர்த்து, 14 நாள் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தில் உங்கள் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது. இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் உணவு உண்ணவோ அல்லது மற்ற பொருட்கள் வாங்கவோ வெளியே போகக்கூடாது; நீங்கள் வேலைக்குச் செல்லக்கூடாது; நீங்கள் பள்ளி/குழந்தை பாராமரிப்பகம்/பல்கலைக்கழகத்துக்குச் செல்லக்கூடாது; நீங்கள் உடற்பயிற்சி நிலையம் அல்லது பொது இடங்களுக்குச் செல்லக்கூடாது. நீங்கள் உங்கள் வீட்டு மேல்மாடத்திற்கோ அல்லது உங்கள் தோட்டத்துக்கோ செல்லலாம்.

- உங்கள் வீட்டை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால், உங்களால் முடிந்தவரை, நீங்கள்:
  - உங்கள் வீட்டிலுள்ள மற்றவர்களிடமிருந்து நீங்கள் பிரிந்திருக்கவும். அத்துடன் உங்களுக்கென்று ஒரு தனியான குளியலறை இருந்தால், அதைக் பயன்படுத்தவும்
  - மற்றவர்களுடன் ஒரே அறையில் இருக்கும்போது அறுவை சிகிச்சைக்கான முகமூடியை அணியவும்
  - பகிர்ந்து கொள்ளக்கூடிய பகுதிகளைத் தவிர்க்கவும். அத்துடன் இத்தகைய பகுதிகள் வழியாக நீங்கள் செல்லும்போது அறுவைச் சிகிச்சைக்கான முகமூடியை அணியவும்
  - வயதான நபர் அல்லது மற்ற உடல்நலப் பிரச்சினை உள்ளவர்களுடன் அறையைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்
  - நீங்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்கும்போது, தேவையில்லாத பார்வையாளர்கள் குறைந்த அளவில் இருப்பதை உறுதி செய்துகொள்ளவும்.

## வீட்டில் தங்குவது என்பதன் பொருள், நீங்கள்:

- வணிக மையங்கள், பணியிடம், பள்ளி, குழந்தைப் பராமரிப்பகம் அல்லது பல்கலைக்கழகம் போன்ற பொது இடங்களுக்குப் போக <u>வேண்டாம்</u>


- உங்களுக்கு உணவு மற்றும் பிற தேவைகளுக்கு யார் மூலமாவது கொண்டுவரச் சொல்லிக் கேட்கவும். அத்துடன் அவற்றை உங்கள் வீட்டு முன்வாசலில் வைத்துவிடச் சொல்லவும்.

- பார்வையாளர்களை உள்ளே அனுமதிக்க <u>வேண்டாம்</u> - வழக்கமாக உங்களுடன் வசிக்கும் நபர்கள் மட்டுமே உங்கள் வீட்டில் இருக்க வேண்டும்

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், மிகவும் பொருத்தமான சேவையைப் பரிந்துரைக்க தேசிய கொரோனா வைரஸ் சுகாதாரத் தகவல் இணைப்பை (National Coronavirus Health Information Line) 1800 020 080 என்ற எண்ணில் அழைக்கவும்.

உங்கள் ஆதரவுக்கும், சமூக ஒத்துழைப்புக்கும் நன்றி. இந்த அளவுக்குத் தொற்றின் தாக்கத்தை நாங்கள் அண்மைய காலங்களில் அனுபவித்ததில்லை. மேலும் இந்த வைரஸின் பரவலைக் குறைக்க ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

சுய தனிமைப்படுத்தல் தொடர்பான கூடுதல் வழிகாட்டல் பின்வரும் இணைப்பில் கிடைக்கும்:
https://www.health.nsw.gov.au/Infectious/diseases/Documents/covid-19-self-isolation-guidelines.pdf



மாநில அவசரகால செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரி
நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை துணை ஆணையர் கேரி வோர்பாய்ஸ் ஏ.பி.எம். (Gary Worboys APM)
18 மார்ச் 2020